**தேர்ச்சி 1.0 : பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.**

## ♣ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**01.**பொருளியலில் அருமை என்னும் பதம் குறித்து நிற்பது
(1).மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலமையினைக் கருதும்.
(2).சகல நாடுகளிலும் வறிய மக்கள் காணப்படுவர் என்பதனைக் கருதும்
(3).வரையறுக்கப்படாத மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்ய சமூகத்திடம் உள்ள வளங்கள் ஒப்பீட்டு ரீதியில் பற்றாக்குறையாக இருப்பதனைக் கருதும்.
(4).இன்றைய சமூகத்தின் வளப்பயன்பாடு எதிர்கால சந்ததியினரைப் பாதிக்கும் என்பதே அருமையாகும்.
(5).வளங்கள் போதியளவு வினைத்திறனையும் விளைதிறனையும் கொண்டிராமை அருமையாகும்.

**02.**ஒரு மாணவனால் மனித தேவைகள் தொடர்பாக பரீட்சைக்கு எழுதிய பண்புகள் வருமாறு
1.மனித தேவைகள் வரையறுக்கப்பட்டவை
2.மனித தேவைகள் நபருக்கு நபர் வேறுபடும்.
3.மனித தேவைகள் ஒரு உயிரியல் விஞ்ஞானக் காரணியுடன் இணைந்ததாகும்.
மேலே மாணவனால் எழுதப்பட்ட விடைகளில் சரியானது /சரியானவை
(1).1ஆவது விடை மட்டும் சரியானது
(2).2ஆவது விடை மட்டும் சரியானது
(3).1ஆவது,2ஆவது விடை மட்டும் சரியானது
(4).1ஆவது,3ஆவது விடை மட்டும் சரியானது
(5).அனைத்து விடைகளும் சரியானது.

**03.**பின்வருவனவற்றுள் அருமைக்கான காரணங்கள்
(1).மனித தேவைகள் வரையறுக்கப்பட்டவையாக இருப்பதுடன் வளங்கள் பற்றாக்குறையாக இருத்தல்
(2).மனித விருப்பங்கள் வரையறையற்றிருப்பதுடன் வளங்கள் பற்றாக்குறையாக இருத்தல்
(3).வளங்கள் மீளப்புதிப்பிக்க கூடியவையாக இருப்பதுடன் புதிய வளங்களை உருவாக்க முடிதல்.
(4).மனிதனைத் திருப்திபடுத்த முடியாதிருப்பதுடன் வளப்பயன்பாட்டுக்கு தடைகள் இருத்தல்.
(5).இன்றைய பொருளாதாரங்களில் அரசும் தனியாரும் போட்டி போடுவதால் வளங்கள் அழிவடைதல்.

**04.**தெரிவு ஒன்று தோற்றம் பெறுகின்றது எனின் அவ் வளங்கள்
(1).அருமையானதாகவும் மாற்றுப்பயன்பாடு அற்றதாகவும் இருக்கும்
(2).அருமையற்றதாகவும் மாற்றுப்பயன்பாடு அற்றதாகவும் இருக்கும்
(3).அருமையானதாகவும் மாற்றுப்பயன்பாடு உடையதாகவும் இருக்கும்
(4).அது முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு சொந்தமான வளங்களாக இருத்தல்
(5).அது சமவுடமைப் பொருளாதாரத்திற்கு சொந்தமான வளங்களாக இருத்தல்.

**05.**உற்பத்தியின் போது அமையச்செலவு தோற்றம் பெறாத சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது
(1).அது பொதுப் பண்டங்களின் உற்பத்தியாக இருத்தல்
(2).நிறைதொழில்மட்ட பொருளாதாரம் உற்பத்தியை ஒரு துறையிலிருந்து இன்னொரு துறை சார்பாக அதிகரித்தல்
(3).பொருளாதாரமல்லா வளங்களின் பயன்பாட்டிற்கு
(4).அவ்வுற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் வளங்கள் மாற்றுப் பயன்பாடுடையதாக இருத்தல்
(5).வளங்கள் யாவும் எல்லையற்ற நிரம்பல் உடையதாக உள்ள போது உற்பத்திக்குப் பயன்படுத்தல்.

**06.**உற்பத்தியின் போது அமையச்செலவு தோற்றம் பெறுகின்றது எனின்
(1).அங்கு பொருளாதாரமல்லா வளங்கள் பயன்படுத்தப்படுகின்றது.
(2).உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட வளங்கள் மாற்றுப்பயன்பாட்டைக் கொண்டிருக்கும்.
(3).உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட வளங்கள் குறித்தவொரு பயன்பாட்டுக்கு மட்டும் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்
(4).பொது வேலையின்மை நிலமை தொழிற்படுதல்.
(5).பயன்படுத்தப்படாத வளங்களின் ஒருபகுதி உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது.

**07.**பின்வருவனவற்றுள் அமையச்செலவு என்னும் பதம் குறித்து நிற்பது
(1).ஒன்றிற்கு பதிலாக இழக்கப்படும் மற்றொன்று அமையச் செலவாகக் கருதப்படும்
(2).குறித்த பண்டத்தின் விற்பனை வருமானத்திற்கும் மொத்தச் செலவிற்குமான வித்தியாசம்.
(3).மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையேயான வேறுபாடு
(4).மாற்றுத் தெரிவுகளால் இழக்கப்படுகின்ற சகல இழப்புக்களினதும் அளவு
(5).மாற்றுத் தெரிவுகள் உள்ள நிலையில் குறித்த தெரிவினை மேற்கொள்ளும் போது இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் இழப்பின் பெறுமதி

**08.**பின்வருவனவற்றுள் நேர்க் கூற்றுக்கு பொருத்தமான உதாரணம்.
(1).மக்களைச் சேமிப்பதற்குத் தூண்ட வேண்டும்
(2).மக்கள் வரி செலுத்துவற்கு ஏதுவாக வரி வீதங்களைக் குறைக்க வேண்டும்.
(3).மின் கட்டணம் உயர்வடையாதிருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(4).வட்டி வீதங்கள் உயர்வது சேமிக்கத் தூண்டுகின்றது.
(5).பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமாக வரவு செலவுத்திட்டத்தை திட்டமிடல் வேண்டும்.

**09.**அடிப்படைப் பொருளாதார அம்சமாகக் **கருத முடியாதது**
(1).அருமை
(2).மாற்றுப் பயன்பாடு கொண்ட பொருளாதார வளங்கள்
(3).தெரிவு செய்தல்
(4).அமையச் செலவு
(5).இலவசப்பண்டங்கள்.

**10.**அமையச்செலவு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் **பொருத்தமற்ற கூற்று**
(1).அமையச்செலவானது பணரீதியிலான அலகுகளிலின்றி பௌதீக ரீதியிலேயே அளவிடப்படும்.
(2).சிலவேளைகளில் பணரீதியிலான செலவிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் நோக்கில் அமையச்செலவானது மெய் அமையச்செலவு (Real opportunity cost ) என அழைக்கப்படும்.
(3).அமையச்செலவு நேர்கணியமானதாக விபரிக்கப்படுகின்றது.
(4).சாத்திய வளையியின் எல்லை அயைச் செலவின் குணகம் மறைப் பெறுமதியுடையது.
(5).அமையச் செலவு ஒரு நிதி ரீதியான எண்ணக்கருவாகும்.

**11.** பின்வரும் தொகுதிகளில் மிகப் பொருத்தமான உதாரணங்களைக் குறித்து நிற்பது.

| | இயற்கை மூலதனம் | சமூக மூலதனம் | சமூகப் பொதுப்பணி மூலதனம் | பொருளாதாரப் பொதுப்பணி மூலதனம் |
|---|---|---|---|---|
| (1) | கனிய வளம் | விவசாய சம்மேளனம் | வைத்தியசாலைக் கட்டிடம் | துறைமுகம் |
| (2) | கனிய வளம் | வைத்தியசாலைக் கட்டிடம் | விவசாய சம்மேளனம் | துறைமுகம் |
| (3) | துறைமுகம் | விவசாய சம்மேளனம் | வைத்தியசாலைக் கட்டிடம் | விமான நிலையம். |
| (4) | துறைமுகம் | வைத்தியசாலைக் கட்டிடம் | விவசாய சம்மேளனம் | விமான நிலையம். |
| (5) | துறைமுகம் | மகளீர் அமைப்பு | பரிசோதனைக் கட்டிடம் | நீர்ப்பாசனக் கால்வாய் |

**12.** சமூக சந்தைப் பொருளாதாரம் தொடர்பாக மிகவும் சரியானது பின்வருவனவற்றுள் எது?
(1) உற்பத்தி வளங்களின் உடமை அரசிற்கும் தனியாருக்கும் சமமாகக் காணப்படும்.
(2) உற்பத்தி வளங்களின் உடமை அரசிற்கு மட்டும் காணப்படும்.
(3) உற்பத்தி வளங்களின் உடமை அரசாங்கத்திற்கு இருந்தாலும் கூட வளப்பயன்பாடு தொடர்பாக அதிகளவு தாக்கத்தை தனியார் மேற்கொள்வார்.
(4) உற்பத்தி வளங்களின் உடமை தனியாருக்கு இருந்தாலும் கூட வளப்பயன்பாடு தொடர்பாக அதிகளவு தாக்கத்தை அரசாங்கம் மேற்கொள்வார்.
(5) உற்பத்தி வளங்களின் உடமை தனியாருக்கு இருப்பதுடன் அதிகளவு இலாபம் பெறுவதை ஊக்குவிப்பாகக் கொண்டு வளப்பங்கீடு இடம் பெறும்.

**13.** பொருளாதாரத்தில் புதிய வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டது இதன் விளைவாக
(1). உற்பத்தி சாத்திய வளையியினுள் உள்ள புள்ளி மேலும் கீழ் நோக்கிய ஒரு அசைவினைக் காட்டும்.
(2). உற்பத்தி சாத்திய வளையியினுள் உள்ள புள்ளி மேலும் கீழ் நோக்கிய ஒரு அசைவினைக் காட்டும்.
(3). உற்பத்தி சாத்திய வளையில் நடைபெறும் உற்பத்தியின் போது அமையச் செலவு ஒன்றும் ஏற்படாது.

(4). பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையி இடதுபுறம் நோக்கி நகர்வடையும்
(5). பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையி வலதுபுறம் நோக்கி நகர்வடையும்

**14.**பின்வருவனவற்றுள் நிலம் என்ற உற்பத்திக்காரணியின் **பண்பல்லாதது**
(1).புவியியல் ரீதியாக அசையும் தன்மை ஒரு எல்லைக்கு உட்பட்டது
(2).நிரம்பல் நெகிழ்ச்சி முடிவிலியாகும்.
(3).சன்மானமாக வாடகை வழங்கப்படும்
(4).ஒரு இயற்கை வளமாகும்
(5).விளைதிறனை உயர்த்த முடியும்.

**15.**பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பொதுப்பணி மூலதனம்.
(1).மகளீர் அமைப்புக்கள் (2).வீதி அமைப்புக்கள் (3).பொருள் இருப்புக்கள்
(4).விவசாய அமைப்புக்கள் (5).தளபாடமும் பொருத்துக்களும்..

**16.** சொத்துரிமையடிப்படையில் பொருளாதாரமுறைமைகளை வகைப்படுத்தின் அவை
(1). சந்தைப் பொருளாதாரம்,சமூகசந்தைப் பொருளாதாரம் எனவகைப்படும்
(2). சந்தைப் பொருளாதாரம் ,கட்டளைப் பொருளாதாரம் எனவகைப்படும்
(3). முதலாளித்துவப் பொருளாதாரம் ,சோஷலிசப் பொருளாதாரம் எனவகைப்படும்
(4). சோஷலிசப் பொருளாதாரம்,சமூகசந்தைப் பொருளாதாரம் எனவகைப்படும்.
(5). சமூகசந்தைப் பொருளாதாரம் ,சந்தைசோஷலிசப் பொருளாதாரம் எனவகைப்படும்

**17.** குறித்த பொருளாதாத்தின் உற்பத்தி சாத்தியவளையி தொடர்பாகத் **தவறான கூற்று**
(1). உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் வளங்கள் நிலையானதாகக் காணப்படும்.
(2). உற்பத்திசாத்தியவளையியின் வலதுபுறத்திலுள்ளபுள்ளியின் மூலம் அருமையினைவிளக்கமுடியும்.
(3). உற்பத்திசாத்தியவளையியின் எல்லைக் கோட்டின் மீதுஅமைந்துள்ளபுள்ளியின் மூலம் உற்பத்தி வினைத்திறனை விளக்க முடியும்.
(4). உற்பத்திசாத்தியவளையியின் எல்லைக் கோட்டின் மீதுஅமைந்துள்ளபுள்ளிகள் அனைத்தும் ஒதுக்கீட்டு வினைத்திறனைக் குறித்துநிற்கும்.
(5). பொருளாதாரம் உற்பத்திசாத்தியவளையியின் வலதுபுறத்திலுள்ளபுள்ளியில் உற்பத்தியினை மேற்கொள்ளமுடியாவிடினும் சர்வதேசவர்த்தகத்தின் மூலம் நுகரமுடியும்.

**18.** தரப்பட்டுள்ள காரணிகளுள் எது உற்பத்திசாத்திய வளையியின் வழியான அசைவினை ஏற்படுத்தும்
(1). நிறைதொழில்மட்டப் பொருளாதாரமொன்றில் புதிய வளங்களின் கண்டுபிடிப்பால் வேலையின்மை ஏற்படல்
(2). நிறைதொழில்மட்டப் பொருளாதாரமொன்றில் வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்.
(3). நிறைதொழில்மட்டப் பொருளாதாரமொன்றில் பொருளாதார மந்தம் காரணமாக ஊழியரின் உற்பத்திதிறன் குறைவடைதல்.
(4). நிறைதொழில்மட்டப் பொருளாதாரமொன்றில் குறித்தவொரு பண்டம் சார்பாக வளப்பயன்பாடு அதிகரித்தல்.
(5). நிறைதொழில்மட்டப் பொருளாதாரமொன்றில் புதிய வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படல்.

**19.** பொருளாதாரம் ஒன்று மிகவிரைவாக வளர்ச்சியடைய வேண்டுமாயின் எது மிகவும் பொருத்தமானது
(1). நிகழ்கால முதலீட்டுச் செலவினங்கள் குறைவடைதல்
(2). நிகழ்காலத்தில் மக்களின் தேவைகள் அதிகரித்தல்
(3). பொருளாதாரத்தில் காணப்படும் வளங்கள் வீண்விரயம் செய்யப்படல்.
(4). நிகழ்கால மக்களின் தெரிவு அதிகளவு முதலீடு சார்பாக இருத்தல்
(5). நிகழ்கால மக்களின் நுகர்வுச் செலவினம் பாரியளவில் அதிகரித்தல்.

**20.**பொருளாதாரம் தொடர்பான சில விடயங்கள் வருமாறு
(1) வளப்பகிர்வுச் செயற்திறன் (2) சுகந்திரம் காணப்படல்
(3) சமூக நலன் காணப்படல் (4) ஊக்குவிப்புக்கள் காணப்படல்
மேற்படி விடயங்களில் சந்தைப்பொருளாதாரத்தின் மூன்று மேன்மையான விடயங்கள்
(1) 1, 2 ,3 (2) 2 ,3, 4 (3). 1 ,2, 4 (4). 1 ,3, 4 (5). 1,2.3.4

**21.**கட்டளைப் பொருளாதாரத்தில் எதிர் நோக்கப்படும் இரு பிரதான பிரச்சனைகள்
(1).ஒருங்கிணைக்கும் பிரச்சனை, தூண்டுதல்பிரச்சனை
(2).விலைகள் காணப்படாமை , வரிகள் அதிகம்
(3).ஒருங்கிணைக்கும் பிரச்சனை,விலைகள் காணப்படாமை
(4).ஒருங்கிணைக்கும் பிரச்சனை, வரிகள் அதிகம்
(5).வரிகள் அதிகம் , தூண்டுதல்பிரச்சனை.

**22.**வெற்றிகரமான அறிவுசார் பொருளாதாரம் கொண்டிருக்கும் பண்பல்லாதது.
(1).பொருளாதாரம் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்துடன் உறுதியான தொடர்பைக் கொண்டிருக்கும்
(2).புத்தாக்கத்திற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும்
(3).கல்வி அறிவை மேம்படுத்தல் பொருட்டு பொருத்தமான முதலீடுகள் மேற்கொள்ளப்படும்
(4).புத்திசாலிகளின் வெளியேற்றத்திற்குப் பூரண அனுமதி வழங்கப்படும்.
(5).ஆய்வு(ஆராய்ச்சி) அபிவிருத்தி மேம்படுத்தல் பொருட்டு பொருத்தமான முதலீடுகள் மேற்கொள்ளப்படும

**23.**முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தீமையாகக் கருத முடியாதது.
(1).வளப் பகிர்வு சில சமயங்களில் வினைத்திறன் அற்றதாக மாறலாம்.
(2).விலைகளின் ஊக்குவிப்புத் தொழிற்பாடு காணப்படல்
(3).வெளிவாரிகள் தோற்றும் போது கவனத்தில் எடுக்காமை
(4).வர்க்க வேறுபாடு தோன்ற வழி வகுத்தல்
(5).வருமான ஏற்றத்தாழ்வு தோன்ற வழி வகுத்தல்

**24.**சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் விலைகளின் தொழிற்பாடு
(1).சமிக்கை வழங்கும் தொழிற்பாடு மட்டும்
(2).ஊக்குவிப்புத் தொழிற்பாடு மட்டும்
(3).பங்கீட்டுத் தொழிற்பாடு மட்டும்
(4).சமிக்கை வழங்கும் தொழிற்பாடு,ஊக்குவிப்புத் தொழிற்பாடு,பங்கீட்டுத் தொழிற்பாடு
(5).சந்தையில் விலை தொழிற்படாது கேள்வி நிரம்பலே தொழிற்படும்

**25.**சந்தைப் பொருளாதாரத்தின் தோல்விக்கு உதவிடும் அம்சம் ஒன்று
(1).பொதுப் பண்டங்களும் மேன்மையான பண்டங்களையும் அரசு வழங்குதல்
(2).மிகத் திருத்தமான தகவல்களைப் பெற முடிதல்
(3).நெகிழ்ச்சி தன்மை மிக உயர்ந்த மட்டத்தில் இருத்தல்
(4).தீர்மானம் எடுத்தல் பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்
(5).மாற்றங்களுக்கு ஏற்ப இலகுவாக சரி செய்யக் கூடிய ஆற்றல்.

**26.**பின்வருவனவற்றுள் விருப்பம் என்பதனுள் அடங்கக் கூடியது.
(1).உணவு (2).ஆயுள்காப்புறுதி (3). உடை (4).உறையுள் (5).பொழுதுபோக்கு

**27.**சந்தைத்தோழமைக் கொள்கையாகக் **கருத முடியாதது**
(1).அரச தனியுரிமையை நிலை நாட்டுதல்
(2).தனியார் முயற்சிகளை அனுமதித்தல்
(3).அரசுடமை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல்
(4).பொருளாதாரத்தில் காணப்படும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி சுகந்திரமாக்கல்
(5).நுகர்வு உற்பத்தி தொடர்பான சுகந்திரம் அளிக்கப்படல்

**28.**யாருக்காக உற்பத்தி செய்தல எனனும் பிரச்சனைக்கு சந்தைப்பொருளாதாரம்
(1).விலைப்பொறிமுறை அடிப்படையில் தீர்வு காண்பதில்லை
(2).அரசின் வழிகாட்டலுடன் கூடிய விலை செலுத்த முன்வருபவருக்கு வழங்கும்
(3).சமூக நன்மையினை அடிப்படையாகக் கொண்டு தீர்வு காணும்.
(4).விலைப்பொறிமுறை அடிப்படையில் குறைந்த விலை செலுத்த முன்வருபவருக்கு அதிகம் வழங்கும்
(5).தனிநபர் வருமானங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**29.**உற்பத்திசாத்திய வளையி வரைதல் தொடர்பான எடுகோள் அல்லாதது.
(1).இருபொருட்களின் உற்பத்தி மட்டும் இடம்பெறும்.
(2).வழங்கப்பட்ட வளங்கள் நிலையானதாகக் காணப்படும்
(3).வளங்கள் வினைத்திறனற்ற விதத்தில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும்.
(4).வழங்கப்பட்ட காலப்பகுதியில் தொழில் நுட்பம் மாற்றமடையாது
(5).வளங்கள் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்படும்.

**30.**உற்பத்தியின் போது அமையச்செலவு அதிகரிக்கின்றது எனின் பின்வருவனவற்றுள் சரியானவை
(1).அங்கு பயன்படுத்தப்படும் வளங்கள் சமனற்ற வகையினதாக இருத்தல்.
(2).ஒரு தொழிலுக்கு வினைத்திறனாகக் காணப்படும் வளம் மற்றொரு தொழிலுக்கு அதேயளவு வினைத்திறனைக் கொண்டிருத்தல்
(3).ஒரு தொழிலுக்கு வினைத்திறனாகக் காணப்படும் வளம் மற்றொரு தொழிலுக்கு அதேயளவு வினைத்திறனைக் கொண்டிராமை
(4).விடை 1 உம் 2உம் பொருந்தும்
(5).விடை 1 உம் 3உம் பொருந்தும்

**31.**பின்வருவனவற்றுள் மீளும்வளம்
(1).பெற்றோலியம் (2).கனியவளம் (3).கடல்வளம் (4).மசகு எண்ணெய் (5).அனைத்து மூலதனமும்

**32.**பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பண்டம் என்ற வகுதிக்குள் அடங்கும் பண்டம்
(1).க.பொ.த உயர்தரச் சான்றிதழ் (2).இரண்டாம்தர கார் (3). இயற்கைக் காற்று
(4).மழை நீர் (5).ஒன்றிற்கும் உதவாதென கைவிடப்பட்ட கார

**33.**பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணி என்ற வகையில் நிலம் என்பதற்கு பொருத்தமான உதாரணம்
(1).ஒரு தேயிலைத் தோட்டம் (2).ஒரு நிலக்கரிச் சுரங்கம் (3).வடகீழ்பருவக்காற்று மழை
(4).ஒரு புராதன நீர்பாசனக் கால்வாய் (5).பிரித்தெடுத்த பெற்றோல்

**34.**பின்வருவனவற்றுள் சமூக மூலதனம்.
(1).ஒரு தொழிற் பயிற்சி நிலையம். (2).வாடகைக் கார் (3).மகளீர்அமைப்பு
(4).பொது கிணறு (5).தொழிற்சாலைக் கட்டடம்.

**35.**பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணி என்ற வகுதிக்குள் அடங்கக் கூடியது
(1).ஒரு நிறுவனம் வேலைக்கமர்த்திய ஊழியத்திற்கு வழங்கும் சம்பளம்
(2).ஒரு நிறுவனம் தொழிலை விரிபுபடுத்த வங்கியில் எடுத்த கடன்
(3).முயற்சியாளன் தனது தொழிலை தொடர்ந்தும் நடத்துவதற்கு எதிர்பார்த்த சாதாரண இலாபம்
(4).உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்படும் சாதனங்களுக்கான வட்டி
(5).உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்படும் சாதனங்கள்

**36.**நிகழ்கால மக்கள் அதிகளவு நுகர்வினையும் குறைந்தளவு முதலீட்டினையும் பெறத் தீர்மானித்து இருப்பின் இதன் விளைவாக
(1).அருமைப் பிரச்சனை தீரும்
(2).எதிர்கால பொருளாதார வளர்ச்சி துரிதப்படுத்தப்படும்
(3).எதிர்கால மக்களின் வாழ்க்கைத்தரத்தில் பாரிய முன்னேற்றம் ஏற்படும்.
(4).நிகழ்கால மக்களின் வாழ்க்கைத்தரத்தில் பாரிய பின்னடைவு ஏற்படும்
(5).நிகழ்கால மக்களின் வாழ்க்கைத்தரத்தில் பாரிய முன்னேற்றம் ஏற்படும்

**37.**.எதனை எந்தளவு உற்பத்தி செய்தல்? எவ்வாறு உற்பத்தி செய்தல்?யாருக்காக உற்பத்தி செய்தல் ஆகிய மூன்று பிரச்சனைகளுடனும் தொடர்புபடாத விடயம் பின்வருவனவற்றுள் எது?
(1).அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் ஆகும்
(2).பொருளாதாரங்கள் விடைகான வேண்டிய முக்கிய மூன்று வினாக்கள் ஆகும்
(3).எல்லாச் சமூகமும் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளாகும்.

(4).தெரிவுடன் தொடர்புடைய பிரச்சனைகளாகும்
(5).இவை பொருளாதாரத்தின் மூலாதாரப் பிரச்சனையாகும்.

**38.**உற்பத்தி சாத்திய வளையியின் இடது புறத்திலுள்ள புள்ளி மேலும் இரு பொருள் சார்பாகவும் இடது புறம் நோக்கி குறுங்காலத்தில் நகர்வடைகின்றது எனின்
(1).பொருளாதார வளர்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது
(2).பொருளாதார வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது
(3).வேலையின்மை அதிகரித்துள்ளது
(4).வேலையின்மை குறைவடைந்துள்ளது
(5).வளத்திரட்சி ஒன்று அதிகரித்துள்ளது.

**39.**பின்வருவனவற்றுள் நியமக் கூற்று என்பதனை சிறப்பாக விபரிப்பது
(1).பொருளாதாரம் என்ன மாதிரி இருக்க வேண்டும் என்று அகவயத் தன்மையான கூற்றுக்கள்
(2).உண்மைத் தன்மையைப் பரிசோதிக்க கூடிய சுற்றுக்கள்
(3).உண்மைஉலகில் அது என்ன மாதிரி இருக்கிறது? இருக்கும்? இருந்தது? என வலியுறுத்தி விளக்கும் கூற்றுக்கள்
(4).பொருளியல் அறிஞர்களால் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூற்றுக்கள்
(5).பொருளியல் அறிஞர்களால் விளக்கப்பட்டுள்ள,முன்வைக்கப்பட்டுள்ள கூற்றுக்கள்

**40.**சந்தைப் பொருளாதாரத்தில் நுகர்வோர்இறைமை பாதிக்கப்படாத சந்தர்ப்பம்
(1).விளம்பரங்களின்அதிகரித்த செல்வாக்குக் காணப்படும் போது
(2).அரசின் வரையறுத்த பங்களிப்புக் காணப்படும் போது
(3).நுகர்வோரின் விருப்ப முன்னுரிமையடிப்படையில் உற்பத்தி நுகர்வு இடம் பெறும் போது
(4).உற்பத்தியாளன்தீர்மானம் சந்தைப்பரப்பில் அதிக செல்வாக்குச் செலுத்தும் போது
(5).நிறைவில் போட்டி தோற்றம் பெற்று தனியுரிமை மேலோங்கும் போது

| | |
|---|---|
| (1).வளங்களின் உரிமை | (2).பொருளாதார சுகந்திரம் |
| (3).ஊக்குவிப்புக் கருவி | (4).அடிப்படைப் பொருளாதாரப்பிரச்சனைக்கான தீர்வு |
| (5).பொருளாதார வினைத்திறன் | (6) பொருளாதார வளர்ச்சி |

மேலே தரப்பட்ட ஆறு விடயங்களையும் கொண்டு **41 ,42**ஆம் வினாக்களுக்கு விடை தருக

**41.**மேலே கூறப்பட்டவற்றுள் பொருளாதார செயலாற்றுகையை மதிப்பிட உதவும் நியதிகள் எவை?
(1). 1, 2, 3 (2). 1, 3, 4 (3). 2, 5, 6 (4). 2, 3, 5 (5). 1, 3, 5

**42.**மேலே கூறப்பட்டவற்றுள் பொருளாதார முறைமைகளை வகைப்படுத்த பயன்படும் நியதிகள் எவை?
(1). 1, 2, 3 (2). 1, 3, 4 (3). 2, 5, 6 (4). 2, 3, 5 (5). 1, 3, 5

**43.**பின்வருவனவற்றுள்பாரம்பரிய பொருளாதார முறைமை ஒன்றின் கோட்பாட்டு ரீதியிலான பண்பு அல்லாதது.
(1).சொத்துடமை முறைமை (2).விலைப் பொறிமுறையின் ஏகாதிபத்திய செல்வாக்கு
(3).எளிய சுயதேவைப் பொருளாதார முறைமை (4).பண்டமாற்று முறைமை
(5).கடந்தகால பழக்க வழக்கங்களின் அடிப்படையில் உற்பத்தி பகிர்ந்தளிக்கப்படல்.

**44.**உற்பத்தி சாத்திய வளையியின் வலப்புறம் நோக்கிய நகர்வுக்கு பொருத்தமான காரணியல்லாதது.
(1).உற்பத்தி திறனில் ஏற்படும் அதிகரிப்பு
(2).தொழில் நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றம்
(3).முகாமைத்துவத்தில் ஏற்படும் முன்னேற்றம்.
(4).அதிகரித்த சிறப்புத் தேர்ச்சியின் நன்மை
(5).பொருளாதார வளங்கள் அழிவுக்கு உள்ளாதால்

**45.**உற்பத்திசாத்திய வளையியின் எல்லைக் கோட்டில் அமைந்துள்ள புள்ளியுடன் **தொடர்புபடாதது**.
(1).வினைத்திறனான உற்பத்தி

(2).மாற்றுப் பயன்பாடு
(3).நிறைதொழில்மட்டம்
(4).சர்வதேச வர்த்தக பரிமாற்றம்.
(5).வளங்கள் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்படல்

**46.**தேவைகள் தொடர்பாக மிகவும் சரியான கூற்று
(1).அனைத்து தேவைகளும் பொருளியலில் ஆராயப்படும்
(2).பொருட்கள் சேவைகளைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத தேவைகள் பொருளியலுடன் தொடர்புடைய தேவைகள் ஆகும்.
(3).மனிதன் என்ற ரீதியில் அவனுக்கு இன்றியமையாத அவன் உயிர் வாழ்வதற்கு அவசியமான அதிகுறைந்த வசதிகள் தேவைகள் ஆகும்.
(4).கொள்வனவு வலு கொள்வனவுத் திட்டம் என்பன ஒன்றிணையும் போது தேவை உருவாகும்.
(5).விருப்பங்களைப்பூர்த்தி செய்யும் பல்வேறுபட்ட முறைகள் தேவைகள்ஆகும்.

**47.**விருப்பங்கள் தொடர்பாக தவறான கூற்று
(1).நபருக்கு நபர் வேறுபடும்
(2).சமூக கலாச்சார பொருளாதாரக் காரணிகளால் மாற்றமடையக் கூடியது.
(3).வரையறுக்கப்படாதது
(4).விருப்பங்கள் பூர்த்தி செய்யப்பட கொள்வனவு சக்கி கொள்வனவுத்திட்டம் அவசியம்
(5).விருப்பங்கள் பூர்த்தி தோற்றம் பெற கொள்வனவு சக்கி கொள்வனவுத்திட்டம் அவசியம்

**48.**பொருளாதார வளங்கள் தொடர்பான **தவறான கூற்று**
(1).அருமையான வளங்களாகக் காணப்படும்
(2).மாற்றுப் பயன்பாடுடைய வளங்களாகக் காணப்படும்
(3).அமையச்செலவற்ற வளங்களாகக் காணப்படும்
(4).பெரும்பாலான பொருளாதாரவளங்கள் தொழில் ரீதியாகவும் புவியியல்ரீதியாகவும் அசையக் கூடியது
(5).பயிற்சியளித்தல் ,கல்வி வசதியளித்தல்,தொழில் நுட்ப முன்னேற்றம் போன்ற காரணங்களால் பெரும்பாலான பொருளாதாரவளங்கின் தரம் உயர்வடையும்.

**49.** மூலவளங்கள் அரசுக்குச் சொந்தமான வகையில் சந்தைப் பொறிமுறையைப் பயன்படுத்தும் நாடுகள் எவ்வாறு அழைக்க ப்படும்.இவை **1937** இல் போலாந்து நாட்டுப் பொருளியலறிஞரான ஒஸ்லான் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட கருதுகோளை அடிப்படையாகக் கொண்டது.
(1). கலப்புப் பொருளாதாரம்
(2). சோசலிசப் பொருளாதாரம்
(3). சந்தைசோசலிசப் பொருளாதாரம்
(4). சமூக சந்தைப் பொருளாதாரம்
(5). முதலாளித்துவப் பொருளாதாரம்

**50.** சந்தைப்பொருளாதாரத்தில் அரசதலையீட்டுக்கான வலுவான மிக முக்கிய காரணமாக கருதப்படுவது
(1). வள ஒதுக்கீட்டுச் செயற்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்தல்
(2). வெளிவாரிகள் தோற்றம் பெறல்
(3). பொதுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படாமை
(4). நிறைவில் போட்டி நிலைமை தோற்றம் பெறல்
(5). வருமானப் பரம்பலில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படல்.

சுய பயிற்சிக்கான இலகுவான வினாக்களும் ஒத்த தன்மையான வினாக்களும் பெரும்பாலும் உள்ளடக்கப்பட்டுள்ளது